**குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.**

**C.C.No.7 /2020**

2025 ம் ஆண்டு ஜுன் மாதம் 24 ம் நாள் செவ்வாய் கிழமை அரசு தரப்பு சாட்சி–4 திரு.கண்ணன் என்பவரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 56 வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.கோவிந்தராஜ், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.கண்ணன் | வயது | : | 64 |
| த.பெ/ க.பெ. | : | இராமலிங்கம் | தொழில் | : | |
| ஊர் | : | | நிலை | : | LW 05 / PW 04 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

**முதல் விசாரணை:**

நான் அணைக்குடத்தில் வசித்து வருகிறேன்.விவசாயம் செய்து வருகிறேன். வழக்கின் புகார்தாரர் எனது பக்கத்து வீட்டுக்காரர். ஆஜர் எதரி எனது ஊரைச்சேர்ந்தவர். சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. நான் அப்போது வேலை விஷயமாக சென்னை சென்றிருந்தேன். இரண்டு நாட்கள்கழித்து நான் ஊருக்கு வரும்போது ஊரில் பிரச்சனை நடந்ததாக கூறினார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் பார்வை மகசரில் உள்ள கையெழுத்து என்னுடையது இல்லை.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் கு/வி.**

கடந்த 27.06.2019 அன்று காலை சுமார் 11.30 மணியளவில் நானும் எனது ஊரைச்சேர்ந்த ராமதாஸ் என்பரும் எங்கள் வீட்டின் முன் பேசிக்கொண்டிருந்தபோது தா.பழூர்காவல் உதவி ஆய்வாளர் வந்து 24.06.2019 அன்று புகார்தாரருக்கும் எதிரிக்கும் தகராரு நடந்த சம்மந்தமாக வழக்கு பதிவு செய்துள்ளதாகவும், அதனால் அது சம்மந்தமாக சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் தயார் செய்ததாகவும் அதில் எங்கள் இருவரையும் சாட்சிகளாக இருந்து கையெழுத்து செய்யும் படி கேட்டுக்கொண்டார்கள் அதனால் சாட்சிகளாக இருந்து கையெழுத்து போட்டுவிட்டு ஆஜர் எதிரி எங்கள் ஊர்க்காரர் என்பதால் அவருக்கு ஆதரவாக உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

/உண்மை நகல் /

ஓம்/.திருமதி.எஸ்.தனலட்சுமி, பி.ஏ. எம்.எல்,

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1,(மு.கூ.பொ)

ஜெயங்கொண்டம்.